



# கிறிஸ்துவ - இஸ்லாமிய - செங்கோல் ஆதினம் மற்றும் பல்வேறு அமைப்புகள் 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு!

## தூத்துக்குடியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தெரிவித்தனர்!

**தூத்துக்குடி, மார்ச் 28 -**

**கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை கிறிஸ்துவ இஸ்லாமிய செங்கோல் ஆதினம் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்!**



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (26.3.2024) காலை, தூத்துக்குடியில், கிறிஸ்துவ இஸ்லாமிய மற்றும் பல்வேறு சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து, இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆதரவு அளித்தவர்கள் விவரம் பின்வருமாறு:

**திருநெல்வேலி மாவட்டம்**

அந்தோணி சாமி ஆயர் அவர்கள்

பர்னபாஸ் அடிகளார், பேராயர் அவர்கள்

அருட்தந்தை டாக்டர் S. மரியதாஸ் SJ அவர்கள்

D.V.P. பொன்ராஜ் அவர்கள்

ஹாஜி Er செய்யது அகமது அவர்கள்

ஹாஜி M.K.M. செய்யது அகமது கபீர் அவர்கள் ஹாஜி

M.K.M. அகமது ஷாபி அவர்கள்

ஹாஜி நவாஸ்கான் அவர்கள்

ஹாஜி F.காதர் முஹைதீன் அவர்கள்

ஹாஜி M.ஷேக் அப்துல்லா அவர்கள்

மீனாட்சி சுந்தரம் அவர்கள்

செல்லையா அவர்கள்

**கன்னியாகுமரி மாவட்டம்**

பால பிரஜாதிபதி அடிகளார் அவர்கள்

நசரேன் சூசை ஆயர் அவர்கள்

அருட்சகோதரிகள்

**தூத்துக்குடி மாவட்டம்**

தூத்துக்குடி தென்னிந்திய திருச்சபை திருமண்டல பேராயர்

LaySecretary

செங்கோல் ஆதினம்

தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம்

All India Chamber of Commerce

ஐக்கிய வியாபாரிகள் சங்கம்

மீனவர் நல சங்கம்

தூத்துக்குடி CSI திருச்சபையினர்

ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற பாடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வின்போது, கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி தொகுதி கழக வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதாஜீவன், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அமைச்சர் மனோ தங்கராஜ், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, சிறுபான்மையினர் நல ஆணைத் தலைவரும் காங்கிரஸ் கட்சியில் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

---

காட்பாடி தொகுதியில் சிப்காட்- ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை!

# டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகளில் வெற்றி பெறச் செய்வீர்!

## தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

*வேலூர், மார்ச். 28 -*

காட்பாடி தொகுதியில் சிப்காட் - ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்றும் அரக்கோணம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை அதிக வாக்குகள் வழங்கி வெற்றி பெறச் செய்வீர் என்றும் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய போது அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டார்.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர். ஜெகத்ரட்சகனைஆதரித்து கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வாக்கு சேகரித்தார்.



அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காட்பாடி சட்டசபை தொகுதியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் தி.மு.க. தேர்தல் பணிமனை திறப்பு விழா மற்றும் வேட்பாளர் அறிமுக விழா சித்தூர் பஸ் நிறுத்தம் அருகே நடந்தது.

நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். பகுதிச் செயலாளர் துணை மேயர் எம். சுனில் குமார் , பரமசிவம், வன்னியராஜா ஆகியோர் வரவேற்றனர். வேலூர் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அனைவரையும் வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் கழக பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் அரக்கோணம் நாடாளுமன்ற கழக வேட்பாளர் ஜெகத்ரட்சகனை அறிமுகம் செய்து பேசினார்கள்.

அமைச்சர் துரை முருகன் அவர்கள் பேசியதாவது:-

இங்கு போட்டியிடும் ஜெகத்ரட்சகன் ஒரு கொடை வள்ளல், அந்த புண்ணியம் தான் அவரை பல ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றி இருக்கிறது.

அவரது வளர்ச்சியை கண்டு ரெய்டு நடத்தி வழக்கு மேல் வழக்கு போட்டார்கள். அவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு என் கட்சிக்காரன் என்னை காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவை, அவர் ஏற்று வேட்பாளராகி இருக்கிறார்.

**ஒரே தொகுதியில் 12 முறை வென்றவன்!**

காட்பாடி சட்டசபை தொகுதியில் கடந்த தேர்தலில் துரோகங்கள் தலை விரித்தாடியது. அதை விவரிக்க விரும்பவில்லை. ஆனா லும் வெற்றி பெற்றேன். எனக்கு கிடைத்த கழக தோழர்கள் வேறு யாருக்கும் கிடைத்தார்களா என தெரியவில்லை. இந்தியாவிலேயே வேறு எந்த எம்.எல்.ஏ. வுக்கும் இல்லாத பெயரை காட்பாடி மக்கள் எனக்கு வாங்கி கொடுத்திருக்கிறார்கள்.

ஒரே தொகுதியில் 12 முறை நின்று வென்றவன், என்ற பெயரை நான் மட்டுமே வைத்திருக்கிறேன். காட்பாடி தொகுதியில் பல்கலைக் கழகம், தாலுகா அலுவலகம், கோர்ட்டு, சட்டக் கல்லூரி கொண்டு வந்தேன். காங்கேயநல்லூர் வழியாக கலெக்டர் அலுவலகத்திற்கு செல்ல பாலாற்றில் மேம்பாலம் கட்டி அடிக்கல் நாட்டினேன். இன்னும் பல பாலங்கள் கட்டி வருகிறேன்.

ஒரு தொழிற்சாலை இல்லையே என்ற குறையை போக்க காட்பாடி அருகே மகி மண்டலத்தில் சிப்காட் அமைக்க, வரும் பட்ஜெட்டில் அறிவிப்பு வர இருக்கிறது. பெல் தொழிற்சாலை அருகில் ஒரு ஐ.டி. பார்க் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறேன். இந்த தேர்தலில் ஜெகத்ரட்சகனுக்கு அதிக ஓட்டு வாங்கி கொடுக்க வேண்டும் துரைமுருகன் அதிக ஓட்டுக்கள் வாங்கி கொடுப்பார் என்ற பெயரை ஏற்படுத்திட வேண்டும்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

---

கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும்

# கழக வேட்பாளர் மலையரசன் திறந்த வேனில் பிரச்சாரம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்!

*கள்ளக்குறிச்சி, மார்ச் 28 -*

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் மலையரசனை ஆதரித்து திறந்த வேனில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ தனது ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட மணலூர்பேட்டையில் பிரச்சாரத்தைதுவக்கினார்.

தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது, அதனை முன்னிட்டு கடந்த மார்ச் 25ஆம் தேதி திங்கள் கிழமை அன்று கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி 'இந்தியா' கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதனை தொடர்ந்து தினசரி பொதுமக்களிடத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அந்த நிலையில் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் தனது பிரச்சாரத்தை துவக்கினார்,இதன் பின்னர் அங்கு கூடியிருந்த தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தி தாரை தப்பட்டை முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து மணலூர்பேட்டை பேரூராட்சியில் அமைந்துள்ள 15 வார்டுகளிலும் திறந்த வேனில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

அப்போது கடைவீதியில் அமைந்துள்ள தேநீர் கடையில் வேட்பாளர் மலையரசன் தேநீரை போட்டு பொதுமக்களிடத்தில் கொடுத்து அவர்களுடன் தேநீர் அருந்தி உதய சூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்.

இந்த நிகழ்வின் போது ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் உடன் இருந்தார், அதனைத் தொடர்ந்து ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட முருக்கம்பாடி, நேரடையார் குப்பம், அத்தியந்தல், ஜம்பை பள்ளி சந்தல், மேட்டுச்சேரி காங்கேயனூர் மேலந்தல் ஆகிய கிராமங்களில் தி.மு.க. நிர்வாகிகள் தொண்டர்கள், 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்களுடன் புடைசூழ பொது மக்களிடத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வின்போது மணலூர்பேட்டை பேரூர் கழகச் செயலாளர் ஜெய் கணேஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பாலாஜி பூபதி, ரிஷி வந்தியம் கிழக்கு ஒன்றிய செயலாளர் பாரதிதாசன், மாவட்ட இளைஞரணி கே.கே.ஆர். என்கிற ராஜீவ் காந்தி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தம்பி துரை,மாவட்ட கவுன்சிலர் வடமாமந்தூர் ராஜேந்திரன் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள், தி.மு.க. மாவட்ட ஒன்றிய பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---




தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக வெற்றி வேட்பாளர் ச.முரசொலி யை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, கழக உயர்நிலைச் செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

**தேர்தல் பிரச்சாரம் "சூடு" பிடித்தது**

